செய்தி வெளியீட்டு எண்.10 **நாள்: 5.1.2010**

# <u>சிறுபான்மையினப் பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.</u>

சிறுபான்மையின மக்களை கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்படுத்தவும், சிறுபான்மையின மக்களுக்கான நலத்திட்டங்களை செம்மையாக நிறைவேற்றிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2007–08 ஆம் ஆண்டு முதல் சிறுபான்மையினர் நல இயக்குநரகம் என்ற அமைப்பை தனியே இயங்க உத்தரவிட்டுள்ளார்.

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜூன் 2009–இல் துணை முதலமைச்சராக பொறுப்பேற்றப் பின் இத்துறையின் செயல்பாடுகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்துறையின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியுடன் பள்ளிக் கல்வி, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைகள் சிறுபான்மையின மாணவ மாணவியர்களுக்கு கடந்த 2007–08 ஆண்டிலிருந்து தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலுபவர்களுக்கு அதிகபட்சமாக ரூ10,000 வரையிலும், 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐடிஐ, ஐடிசி, பாலிடெக்னிக், இளங்கலை–முதுகலை பட்டபடிப்பு வரை , ஆசிரியர் பயிற்சிகள் உட்பட) பயிலுபவர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் 12,350 வரை பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகையாகவும், நான்காண்டு மற்றும் அதற்கு மேல் தொழிற் கல்வி – தொழிற்நுட்ப கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ மாணவியர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 30,000 வரை கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2007–08 (மற்றும்) 2008–09 ஆம் ஆண்டுகளில் பள்ளி படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.3.07 கோடியும், பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.3.35 கோடியும் மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் ரூ.7.81 கோடியும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டு, அதன் மூலம் 37,959 சிறுபான்மையின மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

நடப்பு ஆண்டில் (2009–10) 84,150 மாணவ–மாணவியர்கள் பயன் பெறும் வகையில், பள்ளி படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ. 10.33 கோடியும், 26,342 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.10.83 கோடியும், 1947 மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ 5.06 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை இன்று (5.1.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினை மாணவ–மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைகளை வழங்கி துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 26.22 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகையாக 1 இலட்சத்து 12 ஆயிரத்து 439 சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு பயன்யடையவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயலாளர் திரு. து.நா. இராமநாதன், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத் தலைவர் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ், சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் ஆணையர் (பொ) திரு.பெ.மு.பஷீர் அஹமது, சீர்மரபினர் நல வாரியத் துணைத்தலைவர் திரு.மின்னல்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**